பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை 16.11.2025 கதிர் 008

## இனி இது ரகசியம் அல்ல!

கடந்த வாரத் தொடக்கத்தில், புதுடில்லியில் ஒரு கார் குண்டு வெடித்தது, 24 மணி நேரத்திற்குள், இஸ்லாமாபாத்தில் மற்றொரு கார் குண்டுவெடித்தது. இந்த

☞2

## பிரதமர் கேட்ட கேள்வி

ஆட்சியில் இருக்கும் கட்சி உறுதியானதாக இருக்க வேண்டும். அப்போது தான் ஆளும்தரப்பால் பலமாகச் செயற்படமுடியும். பல கட்சி முறைமை உள்ள நிலையில் தனிக் கட்சியின் அரசியல் கொள்கை பற்றிப் பேசுவதில் என்ன பிரச்சினை உள்ளதென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய எதிர்க்கட்சிகளிடத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சியினர் மக்களுக்கு பயனடையும் வகையில் யோசனைகள் மற்றும் திருத்தங்களை முன்வைக்கவில்லை. மாறாக குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்தார்கள்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கு செல்லும் என்று குறிப்பிட்ட எதிர்தரப்பினர் இன்று திறைசேரியின் கையிறுப்பு நிரம்பியுள்ளது என்று குறிப்பிடும் அளவுக்கு நிலமை மாறியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தியுள்ளோம் என்பதை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

முன்பள்ளி கல்வி அறிவு இருப்பவர்களால்கூட திறைசேரியின் கையிருப்பை அதிகரிக்க முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் எமக்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரச தலைவர்களுக்கு முன்பள்ளிக் கல்வி அறிவுகூட ☞2

# மாகாண சபைத் தேர்தல்முறை தொடர்பில் தனிப் பிரேரணை குழு நிலை விவாதத்தில்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பான விசேட தெரிவுக்குழு மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் விசேட பிரேரணையை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள்அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் முன்வைக்கவுள்ளார். மாகாண சபைத் தேர்தல் குறித்து விசேடதெரிவுக்குழுவை அமைத்து தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை ☞2



## இந்திய நிலைப்பாட்டை மாற்ற

# திருமாவளவனூடாக தமிழ்நாட்டை அணுகும் முயற்சியில் முன்னணி



இலங்கை பொருளாதாரத்தில் இருந்து மீள இந்தியாவின் ஆதரவு நிச்சயமாக தேவைப்படும் போது, இதனை இந்தியா சாதகமாக பயன்படுத்தி, ஈழ தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிரந்தர தீர்வினை பெற்றுதர வேண்டும். அதற்கு தமிழக அரசு காத்திரமான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என தொல் திருமாளவனிடம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேரில் வலியுறுத்தியுள்ளனர்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் 'கார்த்திகைவாசம்'மலர்க்கண்காட்சியை திறந்து வைக்க வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையிலான அணியினர் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் தெரிவித்ததாவது:

இந்தியஇலங்கைஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டு39 வருடங்களாகியும் முடக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட விடயங்களை அமுல்படுத்தாமல் , ஒற்றையாட்சியின் ☞2



# பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த பரிந்துரைகளைப் பகிரங்கப்படுத்துங்கள்

## 'அனைவருக்குமான நீதி' அமைப்பு வலியுறுத்து

பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது, நீதி அமைச்சரிடம் கையளித்துள்ள அறிக்கையையும் வரைவு சட்டமூலத்தையும் பகிரங்கப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் குறிப்பாக நீதி அமைச்சரையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என 'அனைவருக்குமான நீதி' அமைப்பு தெரிவித்துள்ளது

பேராசிரியர் ஜெயதேவா உயங்கொட, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, ஏரான் விக்கிரமரத்ன, ஃபாயிஸ், சுமந்திரன், சாணக்கியன், பவானி பொன்சேகா, எர்மிசா டெகல், நடிஷாணி பெரேரா, ஜெருஷா க்ரொசெட் தம்பையா, ஸ்வஸ்திகா அருலிங்கம், ரவிந்திரன் நிலோஷன்,

# செம்மணி புதைகுழியில் தொடர்புபட்ட படை அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு

## நாட்டை ஒருபோதும் திருத்த முடியாது என்று ஸ்ரீ நேசன் சாடல்

செம்மணி புதைகுழி விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாக இருந்தவர்கள் மேஜர் ஜெனரல் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர். இருவர் பிரிகேடியர்களாக தரமுயர்த்தப்படுத்தப்பட்டுள்ளனர். போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளை தண்டிக்காமல் அவர்களுக்கு உயர் பதவிகளை ☞6

# 75,000 பேருக்கு அடுத்த ஆண்டு அரச நியமனம் வழங்க முடிவு

## அமைச்சர் சமரசிங்க அறிவிப்பு

அடுத்த ஆண்டு 75 ஆயிரம் பேரை அரச நியமனத்துக்குள் உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பட்டதாரிகளும் உள்ளடங்குவார்கள் என்று வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்தார். முன்மொழிவுகளில் ஏதுமில்லை. பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டமில்லை, அரச சேவையாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லை என்று குறிப்பிட்டார்.

பட்டதாரிகளுக்கு அரச நியமனங்களை வழங்கவேண்டும். இருப்பினும் அது குறித்த நிறுவனத்துக்கு அல்லது திணைக்களத் துக்குப் பொருத்தமானதாக அமைய ☞2

# தொல்பொருள் ஆலோசனைக் குழுவில் சேர தமிழ், முஸ்லிம்கள் தயாரில்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு

தொல்பொருள் தொடர்பான ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இணைவதற்கு சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்கள் துறைசார் நிபுணர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. கடந்த காலத் தவறான அனுபவங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். உங்களிடம் சிறந்த பரிந்துரைகள் காணப்படுமாயின் அவற்றை முன்வையுங்களென என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ நேசன், அண்மையில் நியமிக்கப்பட்ட தொல்லியல் ஆலோசனைக் குழுவில் சிறுபான்மை சமூக பிரதிநிதிகள் இல்லை என்று அதிருப்தி தெரிவித்தார். ☞2

## இனி இது .....

இருகுண்டுவெடிப்புகளுக்கும்சிலநாட்களுக்கு முன்பு, இந்தியப் புலனாய்வுத்துறை இந்தியாவால் தேடப்படும், உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பாதாள உலகத் தலைவர் என்று கூறப்படும் தாவூத் இப்ராஹிம் தாவூத் தனது போதைப்பொருள் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் சேர்ந்து இயங்குகத் தொடங்கியிருக்கின்றனர் என்ற செய்தியைக் கசிய விட்டது. இந்திய ஊடகங்கள் இந்தச் செய்தியைப் பரபரப்பாக வெளியிட்டன. ஆனால்,வழக்கமாகஇத்தகையசெய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிங்கள மொழி பத்திரிகைகள் அமைதியாக இருந்தன, ஒரு சில ஆங்கில மொழி செய்தித்தாள்கள் தமிழ்ச் செய்தித் தாள்கள் சிலவும் மட்டுமே அதை இங்கும் செய்தியாக வெளியிட்டன. இந்திய ஆளும்தரப்போஅல்லதுஅதன்உளவுத்துறை சேவைகளோ இந்த அறிக்கையை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.

இந்தியாவில் பரவலான செய்திகள் இருந்தபோதிலும், இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலா, அத்தகைய தகவல் எதுவும் இலங்கை உளவுத்துறைக்கு இந்திய சகாக்களால் பகிர்ந்துகொள்ளப்படவில்லைஎன்றுகூறினார். இன்றுவரை, இந்தியா இந்தக் கூற்றை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை. இருப்பினும், சிலநாட்களுக்குப்பிறகு, புதுடில்லியில் ஒரு குண்டுவெடிப்பு நடந்தது. அதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்திலும் ஒரு தற்கொலைகுண்டுவெடிப்புநடந்தது. புதுடில்லித் தாக்குதலுக்குதாவூத்இப்ராஹிம்மின்ஈடுபாட்டு இருப்பதாக இந்தியா சந்தேகிக்கிறது.

தாவூத் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலால் மிகவும் ஆபத்தான நபராக அறிவிக்கப்பட்டார். சர்வதேசபோதைப்பொருள் கடத்தலில் அவர் ஒரு முக்கிய நபராக அங்கீகரிக்கப்படுகிறார், மேலும் அல்-கொய்தா மற்றும் லஷ்கர்-இ-தொய்பா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுடன் விரிவான தொடர்புகளைப் பேணுபவர் என்றும் கூறப்படுகிறது.

ஒருகாலத்தில்துபாயில்இருந்துசெயல்பட்ட தாவூத், இப்போது பாகிஸ்தானில் இருந்து தனது நடவடிக்கைகளை நகர்த்துகிறார் என்று இந்திய ஆளும்தரப்பு குற்றஞ்சாட்டி வருகிறது. இந்த நிலையில்தான் அவருடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி ஒரு சதி வலையைப் பின்னுவதற்கு இந்தியத் தரப்பு முயற்சிக்கிறது.

இதற்கு முன்னரும் இந்தியக் கடற்பரப்பில் போதைப்பொருள், ஆயுதங்கள்என்பவற்றுடன் கைது செய்யப்படுபவர்களில் ஈழத் தமிழர்கள் யாராவது இருந்தால் உடனடியாக அவர்களை விடுதலைப்புலிகள்இயக்கத்தைமீளுருவாக்கம் செய்பவர்கள் என்று அடையாளப்படுத்துவது இந்தியப் புலனாய்வுத் துறையின் வழக்கமாக இருந்த வந்திருக்கிறது. புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு. அந்தத் தடையைத் தொடர்வதற்கு புலிகள் இயக்கம் இன்னும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அல்லது குறைந்தபட்சம் ஆர்வம் கொண்டிருப்பதாகக் காட்டுவது இந்தியப் பாதுகாப்புத் தரப்புக்கு அவசியமாக இருக்கின்றது. இதுவும் அந்த வகையானவதந்திதானாஎன்பதைஇலங்கை ஆளும்தரப்புத்தான் உறுதிப்படுத்தவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் போன்ற ஒரு தாக்குதல்களுக்கான அடித்தளமாக, ஆளும்தரப்பு போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியிருக்கும் நிலையில் இத்தகைய தகவல்கள் பரப்பப்படுகின்றனவா என்கிற சந்தேகம் தெற்கு அரசியல் பரப்பில் எழுப்பப்படுகின்றன. அண்மையில் சஜித் பிரேமதாசவை புதுடில்லி அழைத்துஉபசரித்திருக்கும்பின்னணியையும் இதனுடன் இணைத்து அந்தத் தரப்புக்கள் நோக்குகின்றன. ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் இப்படித்தான் அநுரவையும் புதுடில்லி அழைத்து உபசரித்திருந்தது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

..........................................

இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா வெள்ளிக்கிழமை தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோரை அழைத்துச் சந்தித்திருக்கிறார். மிகக் குறுகிய காலத்தில் சுமந்திரனை அவர் அழைத்துச் சந்திக்கும் இரண்டாவது சந்தர்ப்பம் இது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியுடன் பேசுவதற்கு அரசுத் தலைவரின் பக்கத்தில் இருந்து பச்சைக் கொடி காட்டப்பட்டிருக்கும்தகவல்கள்வெளியானதைத் தொடர்ந்துஇந்தியஉயராணையர்அவசரமாக இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பின் பாதீட்டை நல்லெண்ண அடிப்படையில் எதிர்ப்பதில்லை என்றுதமிழ்அரசுக்கட்சிமுடிவெடுத்திருப்பதாக சாணக்கியன் அறிவித்திருந்த நிலையில் அவசரமாக இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அநுரவின் செய்தி என்ன என்பதை அறிவதிலேயே உயராணையரின் அக்கறை அதிகம் இருந்தது. இந்தியாவை மீறி ஆளும்தரப்பும் தமிழ் அரசுக் கட்சியும் ஏதாவது தீர்வைக் கண்டுவிடுவார்களோ என்ற பதற்றம் அவருக்கு இருந்திருக்குமோ என்னவோ. அந்தளவிற்கெல்லாம் அவர் அச்சப்படவேண்டியதில்லை. தமிழ்அரசுக்கட்சி அரசுத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்திற்கு இதுவரையில் உத்தியோகபூர்வமான பதில் அனுப்பப்படவில்லை. அரசுத் தலைவரின் செயலகத்திலிருந்துசெயலாளர்சுமந்திரனுடன் தொடர்புகொண்டவர்கள் அடுத்த வாரத்தில் புதன் அல்லது வியாழக்கிழமை ஒரு மணியளவில் சந்திப்பு நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதால் தயாராக இருக்குமாறு தகவல் தெரிவித்திருந்தனர்என்பதுடன்இருக்கிறதுஇந்த விவகாரம். நாடாளுமன்றத்தில்வாக்களிப்பிற்கு முன்பாக அரசுத் தலைவரின் பதில் கடிதம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடக்கவில்லை. ஒருவேளை நாளை அல்லது மறுதினம் கிடைக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இன்னும் இருக்கிறது.

இதற்கிடையே தமிழ் அரசுக் கட்சி வாக்கெடுப்பில் இருந்து ஒதுங்கியமை நல்லெண்ண வெளிப்பாடாக நல்ல நகர்வுதான் என்று இந்திய உயராணையர் பாராட்டியிருக்கிறார். இந்தச் சந்திப்பில் மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்டலாம். அண்மைக் காலமாக, தமிழ்க் கட்சிகள் பலவும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்க் கட்சிகளை ஒன்றாக அழைத்துச் சந்தித்து வந்த இந்திய உயராணையர், இப்போதெல்லாம் தமிழ் அரசுக் கட்சியுடன் மட்டும் சந்திப்பை நடத்தத் தயங்குவதில்லை.

தமதுகருத்துக்களுடன்கொள்கைகளுடன் ரெலோ, புளொட் ஆகியன முரண்படாத நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதற்கு ஒருபோதும் ஒத்துவராது என்று தெரிந்தும் உயராணையர் ஏன் அதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் ஒரு செய்தியாளர் சந்திப்பில் சீறியதிலிருந்து தமிழ் அரசுக் கட்சியுடனான ஆணையரின் சந்திப்பு தனியாகவே நடக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. குனியக் குனியக் குட்டுவார்கள் என்று சும்மாவா சொன்னார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வோம் என அமைச்சரும், சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மாகாண சபைத் தேர்தல் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் இருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி விலகியிருந்தது. ஒரு சிலர் மஞ்சள் குருவிகளாகினார்கள். இதற்கான காரணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெளிவாகக் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இதுவரை காலமும்ஆட்சியில்இருந்தஅரசுத்தலைவர்கள் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை. தங்கள் அரசியல் இருப்புக்காகவே தமிழ் மக்களின் வாக்குகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டு ஆளும்தரப்பு வீழும்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால்தமிழ் மக்கள் ஆளும்தரப்புக்கள் மீது நம்பிக்கை இழந்தார்கள். இந்த ஆளும்தரப்பு மீதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. புதிய அரசமைப்பை உருவாக்குவதாக குறிப்பிட்டீர்கள். ஆனால், இன்றளவில் அதற்குரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக அமையும். மாகாண சபைத் தேர்லை நடத்தும் சட்டத்தை உருவாக்குமாறு அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுகிறார். அரசுத் தலைவர் நினைத்தால் இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணலாம்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காணும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் 2025 மே தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்தார். இந்தத் திருத்தத்துக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். பிரதமர்தலைமையில்ஒரு குழுவை நியமித்து, உரிய நடவடிக்கைகளை எடுங்கள். நாங்கள்ஒத்துழைப்புவழங்குகிறோம் - என்றார்.

பதிலளித்து உரையாற்றிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பான விசேட தெரிவுக்குழு மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் விசேட பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளார். மாகாண சபைத் தேர்தல் குறித்து விசேட தெரிவுக்குழுவை அமைத்து தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, மிக்க நன்றி மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குஉரியநடவடிக்கைகளைவிரைவாக மேற்கொண்டால் இலகுவாக நடவடிக்கை எடுக்கலாம். இந்தத் தீர்மானத்துக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் -என்றார்.

## 75,000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இதனால்தான் தற்போது பட்டதாரிகள் போட்டிப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படுகிறார்கள். அரச சேவைக்கு அரசியல் சிபாரிசுகளுடன் நியமனங்களை வழங்க முடியாது. அவ்வாறு வழங்கினால் வினைத்திறனற்ற அரச நிர்வாகவே தோற்றம் பொறும், நாட்டு மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.

போட்டிப் பரீட்சையை தவிர்த்து எதிர்கட்சித் தவைரின் கொள்கைக்கு அமைய உயரம் என்றால் மெய் பாதுகாவலாளி, குட்டை என்றால் தொழிலாளி ' என்று நியமனம் வழங்க முடியாது. அடுத்த ஆண்டு 75 ஆயிரம் பேரை அரச நியமனத்துக்குள் உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பட்டதாரிகளும் உள்ளடங்குவார்கள்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடக்கத்தில் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இந்த அதிகரிப்புக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பதாகஎதிர்கட்சியின்உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன குறிப்பிட்டார். இந்த முயைற்ற கருத்தால் ஏற்பட்ட நெருக்கடியை தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரே அந்த உறுப்பினருக்கு எதிராகப் பேசினார்.

சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்திக்கு அக்கட்சியின் பங்காளிக் கட்சித் தலைவர்களான மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஸ்ணன் மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் எதிராகியுள்ளமை வரவேற்கத்தக்கது. கடந்த காலங்களை போன்று நாங்கள் மலையக மக்களை ஏமாற்றவில்லை. வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாகவே 200 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்குகொழும்பில்வீடுஇல்லைஎன்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்கு 'வியத்புர' வீட்டுத்திட்டத்தின்கீழ் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் முன்னாள் அரசியல்வாதிகள், அரசியல்ஆதரவாளர்கள்என்றஅடிப்படையில் 529 பேருக்கு இந்த வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்பட்டுள்ளது. இது முறையற்ற வகையிலேயே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவில்லையா என்று கேட்கிறோம். பொருளாதாரத்தை உறுதிப்படுத்தச் சிறந்த தீர்மானங்களை நாங்கள் எடுத்துள்ளோம். அதனால்தான் திறைசேரியின் கையிருப்பு இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தில் கூடி ஆளும்தரப்பு தீர்மானங்களை எடுப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆம் நாங்கள் எமது கட்சி காரியாலயத்தில்கூடி அரசியல் கொள்கை, பொதுக் கொள்கை பற்றிப் பேசுகிறோம்.

கருத்துக்கள் மற்றும் நிலைப்பாடுகளைப் பரிமாறிக்கொள்கிறோம். அரச நிர்வாகக் கட்டமைப்பில் கட்சி கொள்கையை நாங்கள் கொண்டு வரவில்லை. கட்சிக்கு சென்று, ஒன்றிணைந்து பேசுவதில் என்ன பிரச்சினை உள்ளது?

ஆட்சியில் இருக்கும் கட்சி உறுதியானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆளும்தரப்பால் பலமாகச் செயற்படமுடியும். கட்சியின் கொள்கை, அரச கொள்கை மற்றும் ஆட்சிக் கொள்கையை எம்மால் வேறுப்படுத்திப் பார்க்க முடியும். பல கட்சி முறைமை உள்ள நிலையில் தனிக் கட்சியின் அரசியல் கொள்கை பற்றி பேசுவதில் என்ன பிரச்சினை உள்ளது என்றார்.

## தொல்பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பதிலளிக்கையில் சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், தொல்லியல் ஆலோசனைக் குழுவுக்கு அண்மையில் 17 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள்அனைவரும் ஒரே இனம் மற்றும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இனவாதம், மதவாதம் இருப்பதற்கான அடிப்படையாகவே இதனை பார்த்தோம். ஆனால்நீங்கள்நியமித்தஅந்தஆலோசனைக் குழுவிலும்ஒரேஇனம்ஒரேமதம்சார்ந்தவர்கள் இருந்தால்நாங்கள்என்னநினைப்பது. நீங்கள் முற்போக்கானவர்கள். ரோஹன விஜேவீர, சேகுவேரா போன்றோரின் தத்துவங்களின் அடிப்படையிலானவர்கள்என்றால்தொல்லியல் ஆலோசனைக் குழு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமானபிமல்ரத்நாயக்க, தொல்லியல் ஆலோசனைக்குழுவுக்குநியமிக்கப்படும்போது இன ரீதியில் நாங்கள் பார்க்காவிட்டாலும் அதில் இப்போது சிறுபான்மை இனத்தை சேர்ந்த மூவர் இருக்கின்றனர். அமைச்சர் சந்திரசேகரன் அதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

அதில் இணைவதற்குப் புத்திஜீவிகள் பலர் விரும்பமின்றி இருக்கின்றனர். இணைக்கப்பட்ட சிலரும்கூட பல்வேறு தடவைகள் கூறிய பின்னரே அதில் இணைந்தனர். இதற்கு வரலாற்றில் இருந்த பிழையான அனுபவங்கள் காரணமாக இருந்திருக்கலாம்.

தொடர்ச்சி 06ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆளும்தரப்பின் இனச்சார்பின்மை எங்கே?

இலங்கைப் போன்ற பல இன, பல மத அடுக்கு அமைப்பு கொண்ட ஒரு நாட்டில், தேசிய மட்டத்திலான ஆணைக்குழுக்கள், குறிப்பாக வரலாறு மற்றும் மரபு தொடர்பான தொல்லியல் ஆய்வுக் குழுக்கள் மற்றும் அது தொடர்பான ஆலோசனைக் குழுக்கள் மிகுந்த உணர்வுப்பூர்வமான அமைப்புகளாகக் கருதப்படவேண்டியவை. கடந்த காலத்தில் இத்துறைகள் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட அனுபவங்கள் இன்னும் மக்களின் நினைவில் பச்சையாக இருக்கின்றன. வடக்கு கிழக்கில் இப்போதும் இது சார்ந்த திணைக்களத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பெரும் முரண்பாடுகள் இருக்கின்றன. இந்தத் துறைகள் பௌத்த, சிங்கள இனவாதத்துடன் மட்டுமே தொல்பொருள் ஆய்வுகளை நடத்துகின்றன என்கிற குற்றச்சாட்டு மிக நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. இத்தகைய தொடர்புடைய அமைப்புகளின் செயற்பாடுகள் சமூக நம்பிக்கையையும், இன ஒற்றுமையையும் நேரடியாகத் தாக்கும் என்பதை ஆட்சியாளர்கள் மிக நுணுக்கத்துடன் உணர்ந்து செயல்பட வேண்டியது கடமையாகும்.

ஆனால் அண்மையில் 17 உறுப்பினர்களைக் கொண்ட தொல்லியல் ஆலோசனைக்குழுவில் 'ஒரே இனம், ஒரே மதம்' சார்ந்தவர்களை மட்டுமே நியமித்துள்ளது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு. இது பழைய தவறுகளின் மீள்பதிப்பாகவே தெரிகிறது. இதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட விமர்சனம் அதிர்ச்சி அளிக்கவில்லை; மாறாக, அதிர்ச்சியை ஏற்படுத்துவது சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அதற்கு வழங்கிய பதில்தான்.

## பொறுப்பைத் தவிர்க்கும் கோமாளித்தனம்

அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆலோசனைக் குழுவில் சேர முன்வரவில்லை எனவும், கடந்த காலத்தின் தவறான அனுபவங்களால்தான் அவர்கள் பின்னடங்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கிறார். இவ்வாறு கூறுவதில் அவர் வெளிப்படுத்தியிருக்கிற இனமுரண்பாட்டு உணர்திறன் 'பொறுப்பைத் தன்னிடமிருந்து தள்ளிவிட்டு, குற்றத்தை பாதிக்கப்பட்டவர்கள் மீது சுமத்தும் நிலை' ஒரு முதிர்ச்சியுள்ள அரசியல்வாதியின் அணுகுமுறையை அல்ல.

ஒரு சமூகத்தினர் தங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடந்த அநியாயங்களை நினைவில் கொண்டு, எச்சரிக்கையுடன் இருக்கிறார்கள் என்றால், அவர்களையே குற்றம் சாட்டுவது கடமையை மறுக்கும் அரசியல் ஆகும். உண்மையான தீர்வு—அவர்களிடத்தில் நம்பிக்கை உருவாக்குவது; அவர்களைக் குற்றம் சாட்டுவது அல்ல.

## பசுமையான நினைவுகள்

கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் தொல்லியல் துறைக்கு நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவில் ஒரே இனத்தினர் மட்டுமே இடம்பெற்ற சம்பவம் சமூகத்தில் மிகப்பெரிய எதிர்ப்பைத் தூண்டியது. அப்போது தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தொல்லியல் துறை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது என்று கடுமையாகக் குற்றம் சாட்டினர். அதன் பின்னர் சமாளிப்புக்காக சிறுபான்மை இனத்தவர்கள் ஒரு சிலர் அந்தக் குழுவில் ஒப்புக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்த பின்னணியும் அதன் தீமையும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

இந்த வரலாறு நன்கு தெரிந்திருந்தும், இந்த ஆளும்தரப்பு 'தங்களை இனவாதமற்ற, முன்னேற்றவாத ஆட்சி எனக் கூறிக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி' மீண்டும் அதே தவறையே செய்வது, ஆட்சி மாற்றம் நடந்தாலும் பழைய மனப்போக்குகள் மாறவில்லை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

## கொள்கை ஒற்றுமை எங்கே?

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்குவருவதற்கு முன் 'இனவாதமற்ற ஆட்சியை உருவாக்குவோம்' என்று மக்கள் முன் பல முறை உறுதி அளித்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன சொல்லுகிறது?

ஒரே இனம் சார்ந்த 17 பேரின் நியமனம், பின்னர் எதிர்ப்புகளுக்குப் பிறகு அவசரமாக 3 சிறுபான்மையினரை சேர்த்துக்கொள்ளுதல், அதற்கு 'அவர்களே முன்வரவில்லை'என்ற முரண்பாடான விளக்கம் என்கிற இந்த அணுகுமுறை ஆளும்தப்பின் கொள்கை என்பதைப் பறைசாற்றுகின்றது. இது மக்களின் நம்பிக்கையை மட்டும் சிதைக்கவில்லை; தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை கொள்கைகளையே கேலிக்குரியதாக மாற்றுகிறது.

பிமல் ரத்நாயக்கவின் பதில், இந்த விடயத்தில் தவறை முதலில் உணர்ந்து அதைச் சுட்டிக்காட்டியதே ஆளுதரப்புக்குள் உள்ள தமிழர் ஒருவரால் என்று வெளிப்படையாகக் காட்டுகிறது. அதன் பொருள் என்னவென்றால், ஆளும்தரப்பில் இருக்கும் சிங்களவர்களுக்குள் தாம் செய்வது தவறு என்று உணரக்கூடிய ஒருவராவது இல்லை என்பதைத்தான். இது ஆளும்தரப்பு சம்பந்தமாக மிகப் பெரிய குற்றச்சாட்டாகப் பார்க்கப்படவேண்டியது. சட்ட அமைப்பை வடிவமைக்கும்போது பல இனங்களின் நிபுணர்களைத் தேடி அணுகுவது ஆட்சியின் கடமை. ஆனால் அந்த கடமை நிறைவேறவில்லை. அப்படிப்பட்ட கடமைப் பொறுப்பு தமக்கு இருக்கிறது என்பதைக்கூட ஆட்சியிலுள்ள சிங்களவர்கள் உணரத் தலைப்படவில்லை என்பது 'மாற்றம்' எந்த வகையிலும் நிகழவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றது.

## உடனடிச் சீர்திருத்தம் தேவை

இந்தச் சூழலில் தொல்லியல் திணைக்களம், அது மேற்கொள்ளும் ஆய்வுகள் மற்றும் அதன் கண்டுபிடிப்புகள் அனைத்தும் சமூக நம்பிக்கைக்குரியதாக அமைவதற்கு, இனச்சார்பில்லாத நியமனக் கொள்கை, சிறுபான்மை சமூகங்களுடன் நேரடி ஆலோசனை, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய புதிய வழிமுறைகள் அவசியம்.

15 ஆண்டுகளுக்கு முன்பு முடிந்த போரும், இனப் பிளவுகளின் காயங்களும் இன்னும் ஆறாத வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு, இந்த மாதிரியான நியமனப் பிழைகள் மேலும் நம்பிக்கையின்மையை மட்டுமே ஏற்படுத்தும்.

தேசம் ஒன்றுபடவேண்டுமானால், தொல்லியல் போன்ற உணர்திறனுள்ள துறைகளில் அநியாய நியமனங்கள் மூலம் இனச் சுவர்களை மீண்டும் கட்ட வேண்டாம். அதற்குப் பதிலாக, உண்மையான சமத்துவத்தையும், பொறுப்பையும், நம்பிக்கையையும் ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டிய நேரமிது.

# அரசுத் தலைவரின் செலவு 58 சதவீதத்தால் குறைவு

அரசுத் தலைவர் செயலகத்தின் அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்தியதால் இந்த ஆண்டில் முதல் 9 மாதங்களில் அரசுத் தலைவருக்கான செலவு 58 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இது அரசுத் தலைவர் அநுரகுமாரவின் முன்மாதிரியான நடவடிக்கைகளையே எடுத்துக்காட்டுகின்றது. மக்களின் வரிப்பணத்துக்கு நாங்கள் பொறுப்புக்கூறுவோமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தில் அரசுத் தலைவர், பிரதமர், உயர்நீதிமன்றம், அரச அலுவலகங்கள், நாடாளுமன்றம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவுக்காக 40 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் உண்மையான செலவு 25 பில்லியன் ரூபாவாகும். எனினும் எமது அரசுத் தலைவருக்கான இந்த வருட ஒதுக்கீடானது 9 பில்லியன் ரூபா என்பதுடன் அதில் 5 பில்லியன் ரூபா கிளீன் ரீலங்காவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2026ஆம் ஆண்டுக்காக 11.3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 6.5 பில்லியன் ரூபா கிளீன் ரீலங்காவுக்கானது. ஒரு பில்லியன் ரூபா ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் 24 வாகனங்களை பயன்படுத்தி வீதியில் பயணிக்கிறார் என்று தயாசிறி ஜயசேகர இந்தச் சபையில் கூறியிருந்தார். ஆனால் அரசுத் தலைவர் இவர் கூறிய தொகையில் நான்கில் ஒரு பங்கு வாகங்களையே பயன்படுத்துகின்றார். இதனால் தயாசிறி கூறிய கருத்து தவறானது என்பதனைக் கூறிக்கொள்கின்றேன்.

அரசுத் தலைவர் ஆட்சிக்கு வந்த பின்னர் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன்,சமூகத்திற்கு முன்மாதிரியான விடயங்கள் பலவும் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறந்த நன்மைகள் இந்த நாட்டுக்குக் கிடைக்கும். ரணில் விக்கிரமசிங்க காலத்தில் அரசுத் தலைவருக்காக 40 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன். அதில் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்காவும் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்போது செய்த ஆய்வும் இல்லை. செய்த அபிவிருத்தியும் இல்லை.

முன்னாள் அரசுத் தலைவர்கள் எவ்வாறு அவர்களின் ஒதுக்கீடுகளை பயன்படுத்தியுள்ளனர் என்பதனைப் புரிந்துக்கொள்ள முடியுமாக இருக்கின்றது. இவர்கள் இனவாதம், மதவாதத்தை தமது இருப்புக்காக பயன்படுத்தினர். இந்த விடயங்களுக்காகவும் தமது நிதியைப் பயன்படுத்தினர். அதேபோன்று திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரங்களுடன் தொடர்புபட்டு அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து அரசுத் தலைவர்கள் அதற்காக நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்தினர்.

அதேபோன்று இலஞ்ச ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்ட அரசுத் தலைவர்கள் இருந்தனர். ஆனால் நாட்டுக்கு முன்மாதிரியான அரசுத் தலைவர்யொருவர் இப்போது இருக்கின்றார். இந்த முன்மாதிரி எதிர்கால சந்ததியினருக்கு போதுமானது. இப்போது அரசியல் கலாச்சாரம் மாற்றப்பட்டுள்ளது. எந்தவொரு உறவினர், நண்பர்கள் அலுவகத்தில் இல்லை. அதேபோன்று அமைச்சர்களின் எண்ணிக்கை 25ஆகக் குறைக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க காலத்தில் 39 ஆலோசகர்கள் இருந்தனர். கோடிக்கணக்கில் அவர்களுக்காகச் செலவிடப்பட்டது. தமது கட்சியில் தோல்வியடைந்தவர்களையே ஆலோசகர்களாக நியமித்து வாகனங்கள், எரிபொருள் கொடுப்பனவுகள், சம்பளம் எனக் கோடிக்கணக்கில் செலவழித்தனர்.

அதற்காகவே அரசுத் தலைவருக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் ஐந்து ஆலோசகர்களே இருக்கின்றனர். அந்த ஐந்து பேரும் தன்னார்வ அடிப்படையில் பணியாற்றுகின்றனர். அரசுத் தலைவருக்கான நிதி ஒதுக்கீட்டின்போது தேவையில்லாத சகல செலவுகளும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவிடம் 29 ஒருங்கிணைப்புச் செயலாளர்கள் இருந்தனர். இவர்களுக்காகவும் வாகன வசதிகள், எரிபொருள் கொடுப்பனவு, சம்பளம் எனச் சகல வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன. நண்பர்கள், அரசியலில் தோல்வியடைந்தவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் எமது அரசுத் தலைவரினால் ஒருங்கிணைப்பு செயலாளராக ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் தேவையில்லாத செலவுகள் அனைத்தும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

திறைசேரிக்கு கிடைக்கப்பெறும் ஒவ்வொரு ரூபாவும் மக்களின் வேர்வையும், கண்ணீருமே ஆகும். இதனால் ஒவ்வொரு ரூபாவையும் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது. இதன்படி செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இலஞ்ச, ஊழல் மோசடிகள் அரசியலில் இருந்து இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. சட்டவாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தலைவரின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஒரு ரூபாவேனும் பயன்படுத்தப்படுவதில்லை. நாட்டின் தேவைகளுக்காக மட்டுமே அவை பயன்படுத்தப்படுகின்றன. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2025 ஆண்டில் முதல் 9 மாதங்களில் அரசுத் தலைவருக்கான செலவு 58 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசுத் தலைவரின் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. 1,252 பேர் அரசுத் தலைவர் செயலகத்தில் பணியாற்றிய நிலையில் இந்த எண்ணிக்கை 803 வரையில் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி இதற்கான செலவும் 36 வீதத்தால் குறைவடைந்துள்ளது. இதன்படி பணியாளர் குறைப்பின் ஊடாக மாதத்திற்கு 2 கோடியே 49 இலட்சத்து 54ஆயிரத்து 41ரூபாவை சேமிக்க முடியுமாக இருக்கின்றது. அத்துடன் செலவுகள் குறைக்கப்பட்டமை ஊடாக எந்தவித சேவைகளும் பாதிக்கப்படவும் இல்லை. அவை வழமைப்போன்று சிறப்பாக நடைபெற்று வருகின்றன - என்றார்.

# சஜித்திற்குத் தெரியப்படுத்திய பின்பே வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு

## இராதாகிருஸ்ணன் எம்.பி. தெரிவிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அறியப்படுத்தியதன் பின்னரே, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு ,செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கினோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 400 ரூபாயினால் அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்காரணமாகவே நாம் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினோம். பெருந்தோட்ட தொழிலாளர்களினால்தான் நாங்கள் நாடாளுமன்றம் வந்துள்ளோம்.

அவர்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்குமாயின் நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. இதன்மூலம் அரசாங்கத்துடன் இணைவோமென எதிர்பார்க்க வேண்டாம். எனினும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு எமது ஆதரவை வழங்குவோம்.

நாம் சஜித் பிரேமதாசவுக்கு இது தொடர்பில் தெள வுப்படுத்தினோம். இவ்வாறானதொரு சூழலில் நாம் எதிர்த்து வாக்களிப்போமானால், மக்கள் எங்களுடன் முரண்படுவார்களென கூறினோம். அத்துடன் மூன்றாம் வாசிப்பிலும் ஆதரவாகவே வாக்களிப்போம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பில்லியன் கணக்கில் லாபமடையும் நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பறித்துப் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி வலியுறுத்து

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். பெருந்தோட்ட கம்பனிகள் பல உள்ளன. 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கு அமைய இந்த தோட்ட கம்பனிகள் வருடாந்தம் பில்லியன் கணக்கில் இலாபமடைகின்றன. தோட்டக் கம்பனிகளின் வருமானத்தை முறையாகப் பரிசீலனை செய்து, அவர்களிடமிருந்து நிதியை பெற்று அவற்றை மலையக மக்களுக்கு வழங்குங்கள். அப்போது இந்த தொகையை காட்டிலும் பெருந்தொகையான கணக்கில் சம்பள உயர்வை வழங்கலாமென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற, வரவு செலவுத் திட்டத்தில் அரசுத்தலைவர், பிரதமர், உயர்நீதிமன்றம், அரச அலுவலகங்கள், நாடாளுமன்றம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இரண்டாம் வாசிப்பு 118 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றியுள்ளதை ஆளும்தரப்பு கொண்டாடுகிறது. ஆளும் தரப்பிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. ஆகவே எந்தப் பிரேரணை கொண்டு வந்தாலும் ஆளும்தரப்பு நிறைவேற்றும் இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல,

இந்த வரவு- செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் சம்பளம் அதிகிக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் வரவேற்கிறோம். அதேபோல் பெருந்தோட்ட மக்களை 'மலையகத் தமிழ் மக்கள் ' என்று குறிப்பிட்டுள்ளதையும் வரவேற்கிறோம். மலையக மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் நிதி அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது விசேட குறிப்பு ஒன்றை கொண்டு வாருங்கள் நாங்கள் அதற்கு ஆதரவளிப்போம்.

இந்தச் சம்பள அதிகரிப்புக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன எதிர்ப்பு தெரிவித்தார் என்று அவர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை ஆளும் தரப்பினர் முன்வைக்கின்றனர். இந்தச் சம்பள அதிகரிப்பை முறையாக, சட்ட ரீதியில் வழங்குங்கள். முறையற்ற வகையில் எவ்வித உறுதிப்பாடுமின்றி வழங்க வேண்டாம் என்றே அவர் குறிப்பிட்டார். ஆனால் இந்த விடயத்தை முழுமையாகத் திரிபுப்படுத்திவிட்டீர்கள்.மபொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். பெருந்தோட்ட கம்பனிகள் பல உள்ளன. 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கு அமைய இந்த தோட்ட கம்பனிகள் வருடாந்தம் பில்லியன் கணக்கில் இலாபமடைகின்றன.

தோட்டக் கம்பனிகளின் வருமானத்தை முறையாகப் பரிசீலனை செய்து, அவர்களிடமிருந்து நிதியைப் பெற்று அவற்றை மலையக மக்களுக்கு வழங்குங்கள். அப்போது இந்தத் தொகையைக் காட்டிலும் பெருந்தொகையான கணக்கில் சம்பள உயர்வை வழங்கலாம் என்றார்.

# 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சி கிட்டு பூங்காவில் கோலாக தொடக்கம்



தமிழ்த்தேசியப்பசுமைஇயக்கத்தின்'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சி வெள்ளிக்கிழமை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) கார்த்திகைப் பூச்சூடி கோலாகலமாகத் தொடங்கியது. இவ்விழாவில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் பங்கேற்றிருந்தார்.

பசுமை இயக்கத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் யுகேஸ் தலைமையில்நடைபெற்றஇவ்விழாவில்முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா கலந்துகொண்டிருந்தார். பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தொடக்க உரையாற்ற, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சிறப்புரை ஆற்றியிருந்தார். சிவநேசன் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவில் நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா குழுவினரின் மரநடுகைப் பாடல் நாட்டிய நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றிருந்தது. தமிழ்த் தேசியப்பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இம் மலர்க்கண்காட்சி நவம்பர் 23 வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு பொதுமக்கள் மரக்கன்றுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆண்டுதோறும் இக்கண்காட்சியை நடத்தி வருகின்றது.




காலைக்கதிர் Kalaikkathir

## தொல்பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு நான் அமைச்சர் சுனில் செனவிக்கும் கூறியிருந்தேன். இதன்படி இப்போது 19 பேரில் மூவர் நீங்கள் கூறும் பிரதேசத்தில்இருந்துஉள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்களையும் கடும் முயற்சிகளுக்கு மத்தியிலேயே உள்ளீர்த்தோம். உங்களிடம் யோசனைகள் இருந்தால் அவற்றை முன்வையுங்கள். உரிய நடவடிக்கைகளை

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினால் இந்த நாட்டை ஒருபோதும் திருத்த முடியாது. குற்றவாளிகளுக்கு பதவி உயர்வு வங்கினால் இந்நாட்டில் ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியாது. மனிதாபிமானம், மனித நேயம் என்பன இல்லாதொழியும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இனப்பிரச்சினை விடயத்திலும் , இறுதிப் போரின்போது ஏற்பட்ட இழப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் பொறுப்புக் கூறல் வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்வதற்கு கட்டயமாக இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வை கண்டுகொள்ள வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு விடயத்தில் கடந்த காலங்களில் எமது உறவுகள் பலர் இழக்கப்பட்டுள்ளனர். காணாமல் செய்யப்பட்டுள்ளனர். இதற்காக நாங்கள் என்ன செய்துள்ளோம் என்பதனை சிந்திக்க வேண்டும். கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகவும் பேராசிரியராகவும் இருந்த ரவிந்திரநாத் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் செய்யப்பட்டுள்ளார். அது தொடர்பான விசாரணை நடக்கின்றது.

அதேபோன்று அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த தம்பையா வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் ஊடகவியலாளர் நடேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரரராஜசிங்கம், ரவிராஜ் போன்ற அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அதேபோன்று மேலும் பலர் கடத்தப்பட்டு காணாமல் செய்யப்பட்டுள்ளனர் உங்களின் ஆட்சியிலாவது குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் அவர்களுக்கு பதவி உயர்வுகளை கொடுத்துக்கொண்டிருந்தால் இந்த நாட்டை திருத்தவே முடியாது. குறிப்பாக செம்மணி புதைகுழி விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாக இருந்தவர்கள் மேஜர் ஜெனரல் வரையில் தரமுயர்த்தப்பட்டுள்ளனர். இருவர் பிரிகேடியர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அங்கு எவ்வளவு கொடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என்பதனை அங்கு மீட்கப்படும் எலும்புகூடுகளை பார்க்கும் போது தெரிகின்றது.

மனித உரிமைகள் மீறல்களை செய்தவர்கள் இப்போது மேஜர் ஜெனரல்கள் வரையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் பதவி உயர்த்தப்படுவதாக இருந்தால் அந்த நாட்டில் ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் நீதித்துறை சுதந்திரத்தை பார்க்க முடியாது. அங்கே மனிதாபிமானம், மனித நேயம் என்பன மறைந்துவிடும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

சில கைதுகள் நடந்துள்ளன. அதனை வரவேற்கின்றோம். அந்தக் காலத்தில் தங்களை எவரும் தட்டிக்கேட்க முடியாது என்று படுகொலைகளை செய்த பாதகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நாங்கள் திருப்தியடைகின்றோம். ஆனால் இவர்கள் விசாரிக்கப்பட்டு கடந்த காலங்களைப்போல் வெளியில் விடப்படக்கூடாது. அந்தக் குற்றங்களுக்குரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

சிலவேளை சில குற்றவாளிகளை மறைப்பதற்காக சிலர் உங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வரலாம். அவர்கள் மதத் தலைவர்களாகவும் இருக்கலாம் ஏனென்றால் புலிகளின் அழிப்பு விடயத்தில் இவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் என்பதனால் இவர்களை அதற்காக மன்னிக்கலாம் என்று கூறலாம். ஆனால் மனித உரிமைகளை மீறி மிக மோசமாக பாலியல் பலாத்காரங்கள் போன்ற மிக மோசமான செயல்களில் ஈடுபட்டு இந்த நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியவர்களை எப்படி மன்னிக்க முடியும்? கடத்தப்பட்டவர்கள், காணாமல் செய்யப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு வீதிகளில் கண்ணீர் சிந்திக்கொண்டிருப்பவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்

இதேவேளை மற்றுமொரு விடத்தை குறிப்பிட வேண்டும். பல்லின சமூகத்தை சேர்ந்தவர்கள் பரவலாக வாழ்வது சாதாரண விடயம். இந்துக்கள் இல்லாத இடத்தில் கோயில்களையும் கிறிஸ்தவர்கள் இல்லாத இடத்தில் தேவாலயத்தையும் அமைத்து அங்கு மற்றைய மதத்தவர்களை இம்சைப்படுத்துவதற்கு நாங்கள் விரும்புவதில்லை. ஆனால் மட்டக்களப்பு எல்லையில் வடமுனை ஊற்றுச்சேனையில் சிங்கள பௌத்தர்கள் எவரும் இல்லை. ஆனால் பெரும்பான்மை மதத்தலைவர்கள் அங்கு நெடியகல் என்ற இடத்தில் விகாரையை அமைக்கின்றனர். அநுராதஜகம்பத் ஆளுநராக இருந்தபோது இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது நல்லிணக்கத்திற்கு பாதிப்பாகும் என்று மக்கள் சிந்திக்கின்றனர்.

பௌத்தர்கள் வாழாத இடத்தில் அந்த வழிபாட்டிடத்தை அமைப்பது பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். வன வளத்துறை அங்கு பயிர் செய்த காணிகளை வழங்கியுள்ளது. இது நல்லிணக்கத்திற்கு பாதிப்பாகும் என்ற சிக்கல்கள் உள்ளன. எவ்வாறு நீங்கள் இந்த தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கப் போகின்றீர்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். 76 ஆண்டுகளின் பின்னர் நீங்கள் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். 77 ஆவது ஆண்டில் இருந்தாவது இதில் நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2025இல் வெளியிடப்பெற்றது